செ.வெ.எண்.256

நாள். 15.04.2019

# பத்திரிக்கை செய்தி

வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவினைக் கண்காணிக்கவும், வாக்கு எண்ணிக்கையை கண்காணிக்கவும் தேர்தல் துறை இணையதள ஒளிபரப்பு வசதியை (Web Streaming) மேற்கொள்ளவுள்ளது. 39 நாடாளுமன்ற தொகுதி மற்றும் 234 சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சுமார் 30,000 வாக்குச் சாவடிகளில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த இணையதள ஒளிபரப்பு மூலம் (Web Streaming ) நேரடி கண்காணிப்பு வசதி பதற்றமான 8293 வாக்குச் சாவடிகளிலும் செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக, தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் பிரதான கட்டிடம், 2வது மாடியில் கட்டுப்பாட்டு அறை இயங்கி வருகிறது. இந்தக் கட்டுப்பாட்டு அறை மூலம் தேர்தல் நடைமுறைகள், தகவல் தொடர்பு திட்டம், தேர்தல் மேலாண்மைப் பணிக்கான நேரடி விண்ணப்பம், மாநில தொடர்பு மையம், மாவட்ட தொடர்பு மையம், மாவட்ட கட்டுப்பாட்டு அறை, சிவிஜில் (cVIGIL) செயலி புகார்கள், தேர்தல் செலவினங்கள் கண்காணிப்பு, தேர்தல் நடத்தை விதி, வாக்குப்பதிவு கண்காணிப்பு, கணினி தள நேரடி கண்காணிப்பு வசதி, மாவட்ட தேர்தல் அதிகாரிகளிடமிருந்து அறிக்கை பெற்று, அதனை இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அனுப்புவது போன்ற பணிகள் 10.04.2019 முதல் 16 மாவட்ட வருவாய் அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

16 மாவ்ட்ட வருவாய் அலுவலர்களில், 13 மாவட்ட வருவாய் அலுவலர்கள் 39 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான பணிகளையும், ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் 18 சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பணிகளையும் கவனிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2 மாவட்ட வருவாய் அலுவலர்கள் தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பான பணிகளை கண்காணிக்கவும், தேர்தல் செலவினங்கள் மற்றும் பண பட்டுவாடா செய்வதை கண்காணிக்கவும் ஒதுக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு பிரத்தியேகமான தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது. இவர்கள் ஏதேனும் புகார்களை பெற்றால், உரிய மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அல்லது மாவட்ட தொடர்பு மையங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு, அந்தந்த புகார்களை குறித்து உடனுக்குடன் விசாரித்து செயல்படுவார்கள்.

அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் கணினி மூலம் தொடர்பு கொள்ள, username and password அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தேர்தல் நடைமுறைகளுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் நிலைகளை அறிந்திடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள கருடா சிஸ்டம் (Garuda System) உடன் இணைக்கும் வசதி உள்ளது. வாக்குப்பதிவு நாளன்று சுமார் 30,000 வாக்குச் சாவடிகளையும் இணையதள ஒளிபரப்பு (Web Streaming) மூலம் மாவட்ட வருவாய் அலுவலர்கள் நேரடியாகக் கண்காணிப்பார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-09